# சென்னை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறை ஆணை

ந.க.எண். 5112 /அ2/2025 நாள். .08.2025

| | | |
|---|---|---|
| பொருள்: | | தமிழ்நாடு அமைச்சுப் பணி- பள்ளிக் கல்வித் துறை- கருணை அடிப்படையில் நியமனம் – சென்னை-15,சைதாபேட்டை,மாவட்டக் கல்வி அலுவலகம்(தனியார் பள்ளிகள்) - இளநிலை உதவியாளர் – திருமதி.சி.அர்ச்சனா என்பாருக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்க கோருதல்- சார்பு. |
| பார்வை | 1 | சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்:9734/அ 2/2020 நாள்:06.01.2024 |
| | 2 | தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்:41685/ஜே/இ4/2023 நாள்:01.07.2024 |
| | 3 | சென்னை-15 ,சைதாபேட்டை ,மாவட்டக் கல்வி அலுவலரின்(தனியார் பள்ளிகள்)கடிதம் ந.க.எண் :530/அ 1/2025 நாள்:05.06.2025 |

**************************

சென்னை மாவட்டம், ஜி.கே.எம் காலனி, அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழ் பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்து பணிக்காலத்தில் கடந்த 27.12.2012ல் காலமான திருமதி.K.விஜயலட்சுமி என்பாரது வாரிசுதாரரான மகள் திருமதி.சி.அர்ச்சனா என்பாருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி வாய்ப்பு வழங்கப்பட்டு 11.01.2024 அன்று முற்பகல் சென்னை-15 ,சைதாபேட்டை ,மாவட்டக் கல்வி அலுவலகத்தில்(தனியார் பள்ளிகள்) பணியில் சேர்ந்தார். பார்வை 3ல் காண் கடிதத்தின் படி அன்னாரின் பணிவரன்முறை கோரிய கருத்துருவில் அன்னாருடைய முதல் நியமன ஆணையின் பணிப்பதிவேடு பதிவு, பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்று மற்றும் உண்மைத்தன்மை சான்று இணைக்கப்பட்டுள்ளது. மேலும் தாய்மொழியாக தமிழ் மொழி பயின்றுள்ளார். எனவே பார்வை 2 ல் காண் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகளின் படி நியமன அலுவலர் நிலையிலேயே பரிசீலித்து பணிவரன்முறை செய்திடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் அன்னாருக்கு கீழ்க்கண்டவாறு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

Scanned with OKEN Scanner

| வ.எண் | பெயர்/பதவி/திரு/திருமதி/செல்வி | பணிபுரியும் அலுவலகம்/பள்ளி | கருணைஅடிப்படையின் கீழ் இளநிலை உதவியாளர் பணியில் முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | சி.அர்ச்சனா இளநிலை உதவியாளர் | மாவட்டக் கல்வி அலுவலகம் (தனியார் பள்ளிகள்) சைதாபேட்டை, சென்னை-15 | 11.01.2024 முற்பகல் | 11.01.2024 முற்பகல் |

இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் பூர்த்தி செய்த பின்னரே இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும்.

1. பணிவரன்முறை செய்யப்பட்ட இரண்டாண்டு பணிக்காலத்திற்குள் அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது
2. இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும்.

.இணைப்பு:பணிப்பதிவேடு அசல்

18.8.25

முதன்மைக்கல்வி அலுவலர் i/c
சென்னை

9/8/25

பெறுநர்

1. சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக )
2. மாவட்டக் கல்வி அலுவலகம் (தனியார் பள்ளிகள்),சைதாபேட்டை,சென்னை-15
3. கோப்பிற்கு

நகல்:பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது.

Received
10/9/25